கொங்குநாடு மருத்துவமனை சார்பில்

இலவச நடமாடும் பேருந்து மருத்துவ கிளினிக்

கோவை, ஜூன் 7: கோவை கொங்குநாடு மருத்துவமனை 375 படுக்கை வசதியுடன் நகரின் மையப்பகுதியில் பல்துறை மருத்துவமனையாக கடந்த 35 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனை சார்பில் கோவையில் முதல் முறையாக கொங்குநாடு மருத்துவமனை இலவச நடமாடும் பேருந்து மருத்துவ கிளினிக் ஏற்படுத்தி கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு இலவச மருத்துவ முகாம்கள் மூலம் சேவையை செய்ய உள்ளது.

இதன் துவக்க விழா நேற்று தீனம்பாளையத்தில் கொங்குநாடு நர்சிங் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. தமிழக மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். இவ்விழாவில் மேயர் ஆர். ரங்கநாயகி முன்னிலை வகித்தார். கொங்குநாடு மருத்துவமனை மற்றும் கொங்குநாடு நர்சிங் கல்லூரியின் தலைமை அறங்காவலர் டாக்டர் பி.ராஜா வரவேற்புரையாற்றினார். கோவை எம்பி கணபதி ராஜ்குமார், ஊரக மற்றும் சுகாதாரத்துறை துணை இயக்குனர் டாக்டர் பாலுசாமி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, தாளியூர் பேரூராட்சி தலைவர் தண்டபாணி, நைட்டிங்கேல் கல்லூரி தாளாளர் மனோகரன், விஸ்வநாதன் கன்ஸ்ட்ரக்சன் நிறுவன நிர்வாக இயக்குனர் விஸ்வநாதன், கொங்குநாடு நர்சிங் கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் ஆர்த்தி விசுவநாதன், தலைமை அறங்காவலர் விஜயலட்சுமி ராஜா, ஒன்றிய செயலாளர் சாமி பையன் மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் மருத்துவமனை மருத்துவ இயக்குனர் டாக்டர் கார்த்திகேயன் ராஜா நன்றியுரை கூறினார். இந்த இலவச நடமாடும் மருத்துவக் கிளினிக் பேருந்தில் டாக்டர் பரிசோதனை அறை, ரத்தப் பரிசோதனை அறை, எக்ஸ்ரே அறை, இசிஜி அறை, மருந்தக அறை என அனைத்து வசதிகளும் குளிர்சாதன வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வால்பாறை-ஆழியார் சாலையில்

காட்டு யானை நடமாட்டம் அதிகரிப்பு

வாகன ஓட்டிகள் கவனமுடன் செல்ல அறிவுறுத்தல்

பொள்ளாச்சி, ஜூன் 7: வால்பாறை ஆழியார் சாலையில் காட்டு யானை நடமாட்டம் உள்ளதால் வால்பாறை செல்லும் சுற்றுலா பயணிகள் கவனமுடன் செல்ல வேண்டும் என வனத்துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட பகுதியில் அங்காங்கே யானை நடமாட்டம் உள்ளது. வறட்சியான கலங்களில் அடர்ந்த காட்டிலிருந்து யானை உள்ளிட்ட விலங்குகள் நீர்நிலையை தேடி இடம் பெயர்கிறது. இருப்பினும், அடர்ந்த வனத்திலிருந்து யானைகள் இடம்பெயர்வது தொடர்ந்துள்ளது.

இதில் நவமலை மற்றும் ஆழியார் பகுதியில் கடந்த சில நாட்களாக மீண்டும் யானை நடமாட்டம் இருப்பதை வனத்துறையினர் அறிந்து, அங்கு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதில் சுற்றுலா பகுதியான ஆழியாரிலிருந்து வால்பாறை செல்லும் மலைப்பாதையில் ஒற்றை யானை அடிக்கடி வந்து செல்வதால், அந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் அவதிப்படுகின்றனர்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, இடம்பெயர்ந்து வந்த யானையானது, இரவு நேரத்தில் ஆழியார் பூங்கா அருகே வந்துள்ளது. அங்கு கட்டப்பட்டு வரும் மணி மண்டப சுற்றுசுவர் அருகே செல்லும் போது, அதில் ஒருபகுதி சேதமானதாக கூறப்படுகிறது. மாலை நேரத்தில் சிலநாட்களில், வால்பாறை ரோட்டில் உலா வரும் யானையால், அந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது.

இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக வால்பாறை மலைப்பாதை 2வது கொண்டை ஊசி வளைவு பகுதியில் இரவு நேரத்தில் குட்டியுடன் இரண்டு காட்டு யானைகள் நின்றிருந்தது. அந்த வழியாக வந்த வாகனங்களில் வந்தவர்கள் காட்டு யானைகள் சாலையில் நிற்பதை பார்த்ததும் வாகனங்களை மெதுவாக நிறுத்தினர். அப்போது அந்த வழியாக நோயாளிகளை ஏற்றி வந்த 108 ஆம்புலன்சும் நடு வழியில் நின்றது.

காட்டு யானைகள் சாலையில் நீண்ட நேரம் நின்றதால் அப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பின்னர், வனத்துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதன்பேரில் வனத்துறையினர் விரைந்து வந்து காட்டு யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டினர். யானைகள் வனப்பகுதிக்குள் சென்றதும் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக சென்றது. இதனால் அப்பகுதியில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மேலும், ஆழியார் பகுதியில் அடிக்கடி சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் இடங்களில் யானை சுற்றித் திரிவதால், அங்குவரும் சுற்றுலா பயணிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து, சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் கவியருவி அருகே யானைகள் வராமல் தடுக்க, வனத்துறை ஊழியர்கள் ஆங்காங்கே கண்காணிப்பு பணியில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர்.

இதுகுறித்து வனத்துறை அதிகாரிகள் கூறுகையில், "வால்பாறை ஆழியார் சாலையில் தற்போது காட்டு யானைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. வனப்பகுதியில் வறட்சி நிலவுவதால் தண்ணீரை தேடி யானைகள் ஆழியார் அணை பகுதிக்குள் வருகின்றன. இதனால் வால்பாறை சாலையில் அடிக்கடி யானைகள் நின்றுகொண்டுள்ளது. மாலை 6 மணிக்கு மேல் வால்பாறை பகுதிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதி கிடையாது. மேலும் வால்பாறை பகுதியில் உள்ளவர்கள் வந்தால் அவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுகின்றனர்.

மேலும், ஆழியார் சோதனைச்சாவடியில் வால்பாறை செல்லும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு வனவிலங்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்றனர். மலைப்பாதையில் வாகனங்களை நிறுத்தி சுற்றுலா பயணிகள் வனவிலங்கிற்கு தொல்லை கொடுத்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றனர்.

மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கோவை தெற்கு

M.பூங்கொடி, W/o.முருகன்,
30, பொறிகடை சந்து,
வி.கே.ரோடு, பீளமேடு,
கோவை-4. -மனுதாரர்

-எதிர்-

1.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
கோவை தெற்கு
2.வட்டாட்சியர் அவர்கள்,
கோவை தெற்கு

-எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது மகன் M.நிரஞ்சன் கடந்த 26.09.2017 அன்று கோவை சௌரிபாளையம் ரோஸ்லெட் மருத்துவமனையில் பிறந்ததை பதிவு செய்து பிறப்பு சான்றிதழ் வழங்கக் கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இது குறித்து ஆட்சேபணை ஏதும் உள்ளவர்கள் இன்றிலிருந்து 7 நாட்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சம் மேற்படி மனு மேற்படி மனுதாரர் கோரியபடி உத்தரவாகி விடும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வருவாய் கோட்டாட்சியர்
கோவை தெற்கு

இஸ்லாமியர்களின் போராட்டம் எதிரொலி

பள்ளிவாசல் அருகே தொழுகை நடத்த வட்டாட்சியர் அனுமதி

▶ சூலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மனுக்களுடன் வந்த பள்ளிவாசல் நிர்வாகிகள்.

சூலூர், ஜூன் 7: கோவை மாவட்டம் சூலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பாக சுன்னத் ஜமாத் பள்ளிவாசல் உள்ளது. இதன் அருகிலேயே குறிப்பிட்ட அளவிற்கு காலி யிடம் உள்ளது.

இந்த இடம் தொடர்பாக பள்ளிவாசல் நிர்வாகத்திற்கும் வேறு சில அமைப்புகளுக்கும் எதிராக பிரச்னை நீடித்து வருகிறது. இது தொடர்பாக வழக்கு நீதிமன்றத்தில் உள்ள நிலையில் இந்த காலி இடத்தை இஸ்லாமியர்கள் பண்டிகை காலங்களில் பயன்படுத்திக் கொள்ளலாம் என முன்னாள் மாவட்ட கலெக்டர் உத்தரவு அளித்துள்ளார்.

இந்நிலையில், கடந்த ரம்ஜான் பண்டிகையின் போது இஸ்லாமியர்கள் அந்த இடத்தை பயன்படுத்தினர். அதற்கு ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். அதை தொடர்ந்து இன்று கொண்டாட உள்ள பக்ரீத் பண்டிகைக்கு அந்த இடத்தை பயன்படுத்தி கொள்ள வட்டாட்சியர் இடம் கடந்த 27ம் தேதி அனுமதி கோரி இருந்தனர். நேற்று வரை வட்டாட்சியர் அனுமதி கொடுக்காததால் ஒரு பிரிவை சேர்ந்தவர்கள் திடீர் முற்றுகை போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்துவதாக அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், போலீசார் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் திடீர் ஆலோசனை செய்து நேற்று மதியம் வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட முயன்றவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சம்பந்தப்பட்ட இடத்தின் சாவியை ஒப்படைத்தனர்.

இரண்டு நாட்கள் உபயோகத்திற்கு பின் 9ம் தேதி காலை இடத்தின் சாவியை வட்டாட்சியரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் கையொப்பம் பெற்றுக் கொண்டு இடத்தை ஒப்படைத்துள்ளனர். வட்டாட்சியர் இந்த நடவடிக்கையால் வந்தவர்கள் கலைந்து சென்றனர்.

அசோகபுரம் அரசு பள்ளியில்

200 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி

▶ அசோகபுரம் ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தொடங்கி வைத்தார்.

பெ.நா.பாளையம், ஜூன் 7: கோவை துடியலூர் அருகே உள்ள அசோகபுரம் ஊராட்சியில் ஒன்றிய துவக்கப்பள்ளி, பெண்கள் உயர்நிலைபள்ளி மற்றும் அரசு மேல்நிலைபள்ளி என மூன்று அரசு பள்ளிகள் உள்ளது.

மகாத்மா காந்திதேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் உலக சுற்று சூழல் தினத்தை முன்னிட்டு மரகன்றுகள் நடும் திட்டத்தை வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் தொண்டாமுத்தூர் அ. ரவி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கார்த்திக், மாவட்ட பிரதிநிதி செந்தில் ராஜா முன்னாள் ஊராட்சி தலைவர் பி.வி. மணி, தலைமை கழக பேச்சாளர் சகாவிக் னேஷ், தலைமை ஆசிரியர் சுனிதா, ஊராட்சி செயலாளர் லீலா கிருஷ்ணன், அவை தலைவர் வேணுகோபால், ஸ்ரீதர், சார்லஸ், நெடுஞ்செழியன், சேகர், சிவபாதம், காந்தி, குணா, சரவணன், கருணாநிதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வால்பாறையில் தொடர் மழை பெய்து வருவதால்

தேயிலை மகசூல் அதிகரிப்பு

▶ வால்பாறை பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது. இதனால், தோட்டதொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தோட்டத்தொழிலாளர்கள் மகிழ்ச்சி

வால்பாறை, ஜூன் 7: வால்பாறை பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது. இதனால், தோட்டதொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம் வால்பாறையில் பிரதான தொழிலாக தேயிலை தொழில் ஆகும். இங்கு ஏராளமான தேயிலை தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர். கடந்த ஏப்ரல், மே மாதத்தில் வால்பாறையில் கடுமையான வெயில் வாட்டி வதைத்தது. இதனால், பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாயினர். வெயிலின் தாக்கத்தால் தேயிலை செடிகள் கருகியது. தேயிலை செடிகள் கருகி வந்ததால் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் பலருக்கு வேலை இல்லாமல் இருந்தது.

இதனால், ஏராளமான தொழிலாளர்கள் வேலை தேடி திருப்பூர், கோவை, ஈரோடு பகுதிகளுக்கு குடிபெயர்ந்து சென்றனர். இதனால், வால்பாறை எஸ்டேட்டில் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டது.

இந்நிலையில், தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளதால் தேயிலை செடிகள் துளிர் விட ஆரம்பித்துள்ளன.

இதனால், தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது. தேயிலை மகசூல் அதிகரித்துள்ளதால் தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பச்சை மிளகாய் வரத்து குறைவு

பொள்ளாச்சி, ஜூன் 7: பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து காய்கறிகள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி, கத்தரி, வெண்டை, பூசணி, பச்சை மிளகாய் உள்ளிட்ட காய்கறிகள் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்தே அதிகளவில் வருகிறது. இதில் பச்சை மிளகாய்யானது சுற்றுவட்டார பகுதி மட்டுமின்றி திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, உடுமலை பகுதிகளில் இருந்தும் விற்பனைக்காக அதிகளவு கொண்டுவரப்படுகிறது.

இதில் இந்த ஆண்டு துவக்கத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தாலும், பல கிராமங்களில் பச்சை மிளகாய் சாகுபடி அதிகமாக இருந்தது.

இதனால், கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் என சில மாதமாக அறுவடை செய்யப்பட்ட பச்சை மிளகாய் வரத்து மார்க்கெட்டுக்கு அதிகமாக கொண்டு வரப்பட்டது. வரத்து அதிகமாக இருந்ததால், வியாபாரிகள் அதனை ரூ.35 முதல் ரூ.40 வரை என குறைந்த விலைக்கு விற்பனை செய்தனர்.

இந்நிலையில் சுற்றுவட்டார கிராமங்களிலும், வெளியிடங்களிலும் பச்சை மிளகாய் சாகுபடி புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால், கடந்த சில வாரமாக பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு பச்சை மிளகாய் வரத்து மிகவும் குறைந்துள்ளது. பச்சை மிளகாய் வரத்து குறைந்ததையடுத்து அதனை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதில் நேற்று மார்க்கெட்டில் ஒருகிலோ பச்சை மிளகாய் ரூ.80 முதல் ரூ.85 வரை என கூடுதல் விலைக்கு போனது. வரும் நாட்களில் பச்சை மிளகாய் வரத்து இன்னும் குறைந்தால், அதன் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

கேரளாவில் இருந்து பொள்ளாச்சிக்கு

அன்னாசி பழம் வரத்து அதிகம்; குறைவான விலைக்கு விற்பனை

பொள்ளாச்சி, ஜூன் 7: பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டுக்கு ஒவ்வொரு ஆண்டும் மாம்பழம், தர்பூசணி, பலாபழம், அன்னாசிபழம் மற்றும் கரும்பு உள்ளிட்டவை சீசனை பொறுத்து விற்பனைக்காக மொத்தமாக கொண்டு வரப்படுகிறது. இந்த ஆண்டு துவக்கத்தில் இருந்து, தர்பூசணி வரத்து அதிகமாக காணப்பட்டது.

இதில், கேரள மாநிலத்தின் பல்வேறு பகுதியிலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் துவக்கத்தில் அன்னாசி பழம் வரத்து ஓரளவு இருந்தது. அதன் பின், கடந்த மாதம் துவக்கத்திலிருந்து இரண்டாவது அறுவடை துவங்கியது. அதிலும், கடந்த இரண்டு வாரமாக கேரள மாநிலம் மலப்புரம், கொழிச்சாம்பாறை, சாலக்குடி, அங்கேஷ்வரி, கொரடி, பாட்டியூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அன்னாசிபழம் வரத்து அதிகரித்துள்ளது.

பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில் குவிந்துள்ள அன்னாசி பழங்களை உள்ளூர் வியாபாரிகள் மட்டுமின்றி உடுமலை, திருப்பூர், கோவை, பல்லடம், ஈரோடு மற்றும் வால்பாறை உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து வியாபாரிகள் விற்பனைக்காக வாங்கி செல்கின்றனர். இதனால், கேரள அன்னாசி பழத்துக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. கடந்த, மோ மாதம் துவக்கத்தில் ஒரு கிலோ அன்னாசிபழம் ரூ.50 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது, கேரள மாநிலத்திலிருந்து அன்னாசிபழம் வழக்கத்தைவிட அதிகரிப்பால், ஒருகிலோ ரூ.30 முதல் அதிகபட்சமாக 40க்கு விற்பனை செய்யப்படுகிறது. அன்னாசி பழம் வரத்து அதிகமாக இருக்கும் வரை, அதன் விலை சரியும் அதன்பின், விலையில் மாற்றம் ஏற்படவாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

அசல் சொத்து ஆவணம் காணவில்லை

திருப்பூர் -641 602, பி.என். ரோடு, எஸ்.வி. காலனி சந்து வீதி, கதவு எண்.16/18ல் வசித்து வரும் லேட். சங்கர் அவர்களின் மகள் சித்ரா சங்கர் ஆகிய எமது கட்சிக்காரருக்காகக் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால், எனது கட்சிக்காரர் கடந்த 31.05.2025 அன்று கோவை மாவட்டம், சூலூர் காவல் நிலையம் அருகே உள்ள ஜெராக்ஸ் கடையில் நகல் எடுக்க வந்த போது எனது கட்சிக்காரரின் தாயார் லேட். S. சரோஜினி அவர்கள் பெயரில் திருப்பூர் ரிடி, தாராபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 8754/2011 நாள் : 09.08.2011 என்ற எண்ணாகப் பதிவான அசல் கிரையப் பத்திரமானது காணாமல் போய்விட்டது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. எனவே மேற்படி காணாமல் போன அசல் கிரைய ஆவணம் கிடைக்கப் பெற்றவர்கள் அதனை என்னிடமோ எனது கட்சிக்காரரிடமோ ஒப்படைக்குமாறும், அதனை வைத்து ஏதேனும் வில்லங்க விவகாரத்திற்கு உட்படுத்தினால் அவை எனது கட்சிக்காரரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதை இதன் மூலம் அறியவும்.

No.14/7A12, Eswaran Complex
2nd Floor, Manickapuram Road,
Palladam - 641 664.

S. Senthilkumar, B.Com., B.L.,
Advocate
Cell No. : 97508 42153.

டாடா கேபிடல் லிமிடெட்

பதிவு முகவரி: டவர் A, 11வதுவது தளம், பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கணபத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை 400 013.
கிளை முகவரி: எண் 218, 2வது தளம், கப்ரூ டவர்ஸ், கல்லேஜ் ரோடு சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு 641002.

அசையா சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

கடன் கணக்கு எண்.: TCFLA0479000011064533 மற்றும் TCFLA0479000010906256: திரு. மோகன்ராஜ் R

டாடா கேபிடல் லிட். (டிசிஎல்) என்பது வங்கியல்லாத நிதிநிறுவனமாகும். நிறுவனங்கள் சட்டம்,1956-ன் விதிகளின் கீழ் இணைக்கப்பட்டது. மேலும் அதன் பதிவு அலுவலகம் பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, டவர் A, 11ஆவது தளம், கணபத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013 என்ற முகவரியிலும் அதன் கிளை அலுவலகங்களில் ஒன்று சென்னையில் (துமிழ்நாடு) கிளை) உள்ளது. டாடா கேபிடல் வைஸ்லன்சியா லிமிடெட் (டிசிவிஎல்) என்பது டிசிஎல் மற்றும் டாடா கிளிக்டெக் கேபிடல் லிமிடெட் (டிசிகேஎல்) நிறுவனம் ஆகியவற்றின் நிதிநிறுவனமாகும். நிறுவனங்கள் சட்டம்,1956-ன் விதிகளின் கீழ் இணைக்கப்பட்டது. மேலும் அதன் பதிவு அலுவலகம் பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, டவர் A, 11ஆவது தளம், கணபத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013 என்ற முகவரியிலும் அதன் கிளை அலுவலகங்களில் ஒன்று சென்னையில் (துமிழ்நாடு) உள்ளது. மாற்றாக, டிசிஎல் மற்றும் டிசிவிஎல் (மாற்றிக்கொள்ளப்படும் நிறுவனங்கள்) ஆகியவை டிசிஎல் ஆக மாற்றப்பட்டு அதன் தொடர்ச்சி அனைத்து சொத்துகள், சொத்துகள், உரிமைகள், பணிகள், நலன்கள், கடமைகள், பொறுப்புகள், உடமைகள், ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்கள், பத்திரங்கள் ஏனையவை 01.01.2024-லிருந்து டிசிஎல்- உடன் இணைக்கப்பட்டுள்ளன. மேற்குறப்பட்ட உத்தரவு மற்றும் திட்டத்தில் இணங்க, துணைத் டிசிஎல்லால் நிர்வகிக்கப்பட்ட அனைத்து பணப்பாட்டு ஆவணங்களும் மற்றும் அது தொடர்பாக நிலுவையில் உள்ள அனைத்தும் வின்னாப்தாரர் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. எனவே அதன் அடிப்படையில் கடன்தாரர்கள் / உப கடன்தாரர்களிடமிருந்து டிசிஎல் ஆனது கோருவதற்கு உரிமையுடையது.

இனிமேலும் பொறுப்புகளுக்குப் பொறுப்பாக மேலும் கிழக்காணும் கடன்தாரர் மற்றும்/ கட்டு கடன்தாரர் ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் லிமிடெட் (கடனீட்டு கடனீடுதோர்) டிசிஎல்) வரம் ஆவணம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் லிமிடெட் (கடனீட்டு கடனீடுதோர்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சலுகையை செய்யப்பட்டுக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, 'உள்ளது உள்ளபடித்தின்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 1 ஜூலை 2025 தேதியன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

அதேசமயம், கடனீட்டுச் சொத்தின் கீழ் பெறப்பட்ட கடனை வசூலிப்பதற்காக கடனீட்டுச் சொத்து விற்பனை செய்யப்படுகிறது. அதாவது, 31 மே 2025 தேதிப்படி நிலுவைத் தொகை மொத்தம் ரூ.3,37,92,933/- (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தேழு லட்சத்து தொன்னூற்று இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று மட்டும்) அதாவது, கடன் கணக்கு எண். TCFLA0479000011064533-க்கு நிலுவையில் உள்ள ரூ.2,95,22,449/- மற்றும் கடன் கணக்கு எண். TCFLA0479000010906256-க்கு ரூ.42,70,484/- தொகையை கடன்தாரர் & உப கடன்தாரர்கள் ஏமாற்றுகிறார்கள், அதாவது.

(1) திரு. R. மோகன்தாஸ், த/பெ. ராமசாமி, எண். 5, சிவசக்தி காலனி, 2-வது தெரு, கணபதி, கோயம்புத்தூர், தமிழ்நாடு 641006; (2) திருமதி R காந்திமதி, க/பெ. ராமசாமி, எண். 5, சிவசக்தி காலனி, 2-வது தெரு, கணபதி, கோயம்புத்தூர், தமிழ்நாடு 641006; (3) திருமதி மனோமணி, க/பெ. மோகன்தாஸ், எண். 5, சிவசக்தி காலனி, 2-வது தெரு, கணபதி, கோயம்புத்தூர், தமிழ்நாடு 641006; (4) M/s. R M டிரேடர்ஸ், பிரதிநிதித்துவப்படுத்தும் இதன் பங்குதாரர்: திரு. R. மோகன்தாஸ், 590 ரங்கசாமி நாயுடு தெரு, கோயம்புத்தூர், தமிழ்நாடு 641006.

இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லையெனச் எந்தவிட, மேற்குறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்குறிய 1 ஜூலை 2025 தேதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு மின்-ஏல மூலம் அதன் கிளை அலுவலகமான எண் 218, 2வது தளம், கப்ரூ டவர்ஸ், கல்லேஜ் ரோடு சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு 641002.-ல் விற்பனை செய்யப்படும்.

மின்-ஏலத்தின் பங்கேற்புக்கான முன்வைப்புத் தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது 30 ஜூன் 2025 தேதி அன்று மாலை 5.00 மணி வரை, டாடா கேபிடல் லிமிடெட் அதிகாரப்பூர்வ அதிகாரியால் பெற்றுக்கொள்ளப்படும்.

கடனீட்டுச் சொத்துகளின் விவரம்	சுவாதீனத்தின் வகை ஆக்கபூர்வ/ கையக	நிர்ணய விலை (ரூ.)	முன்வைப்புத் தொகை EMD (ரூ.)
இனம் எண் 1- (சொத்தின் உரிமையாளர்: காந்திமதி): கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சுண்டாமி எஸ்பிரி மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, கணபதி கிராமத்தைச் சேர்ந்த SF எண் 173, நிலங்கள் லிமிடெட் இடங்களை பிரிக்கப்பட்டு மற்றும் சிவசக்தி காலனி என பெயரிடப்பட்டது. இதில் கதவு எண் 54, பிரதானம் எல்லைகளுக்குள் அமைந்துள்ள மனை எண் 56-க்கு வடக்கில், மனை எண் 19-க்கும் கிழக்கில், கிழக்கு மேற்கு சாலைக்குத் தெற்கில், மனை எண் 55-க்கு மேற்கில். இவற்றுக்கிடையே உள்ள அளவு: கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 40 அடி, வடக்குத் தெற்காக இரண்டு பக்கமும் 77 அடி. மொத்தப் பரப்பளவு 3080 சதுர அடி அல்லது 7 சென்ட் 031 சதுர அடி கொண்ட நிலம். இதன் எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு: வடக்குப் பகுதியில் அமைந்துள்ள மனை எண் 56-க்கு வடக்கில், குப்புசாமி முதலியார் அவர்களின் மனை எண் 19-க்கும் கிழக்கில், கிழக்கு மேற்கு லேஔட் சாலைக்குத் தெற்கில், முத்துலட்சுமி அவர்களின் மனை எண் 55-க்கு மேற்கில். இவற்றுக்கிடையே உள்ள அளவு: தெற்கிலிருந்து கிழக்காக முதல் நேர்கோடு 41 அடி, இதிலிருந்து வடக்கு நோக்கி 37.50 அடி, இதிலிருந்து கிழக்கு நோக்கி 38.50 அடி, இதிலிருந்து வடக்கு நோக்கி 39.50 அடி, இதிலிருந்து கிழக்கு நோக்கி 3.50 அடி, இதிலிருந்து வேறு நோக்கி 77 அடி. மொத்தப் பரப்பளவு 1638 சதுர அடி அல்லது 3 சென்ட் 331 சதுர அடி கொண்ட நிலம் மற்றும் RCC கட்டிடம், வீடுகள், கதவு எண் 201, PN சாலை, குள்ளக்கால், நீர் இணைப்பு நீர் வரித் திரை எண் 372309, மின்னாளரியே இணைப்பு மின்னாளரியே சேவை இணைப்பு எண் 488, தொடர்புடைய வைப்புத்தொகைகள் உட்பட. இத்தகைய பொதுப் பயன்பாட்டுக்காக பயன்படுத்தும் வேஔட் சாலை மற்றும் வழிப்பாதை முதலானவற்றில் உரிமையைக் கொண்டு. இந்தச் சொத்து SF எண் 173/72-இல் அமைந்துள்ளது.	கையக	₹ 1,72,28,000/- (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து இரண்டு இலட்சத்து இருபத்து எட்டாயிரம் மட்டும்)	₹ 17,22,800/- (ரூபாய் பதினெழு இலட்சத்து இருபத்து இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்)
இனம் எண் 2- (சொத்தின் உரிமையாளர்: மோகன்தாஸ்): கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சுண்டாமி எஸ்பிரி மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, கணபதி கிராமத்தைச்